# எங்கள் அருமையான பாடசாலை




கதை, சித்திரம்

**சிபில் வெத்தசிங்ஹ**

தமிழ் மொழிபெயர்ப்பு - சரோஜினிதேவி அருணாசலம்

© SDC – முதல் பதிப்பு - 2012

# பிரதேசப் பணிப்பாளரின் செய்தி
# அபிவிருத்திக்கும் ஒத்துழைப்பிற்குமான சுவிஸ் முகவர் நிலையம் (SDC) இலங்கை

அபிவிருத்திக்கும் ஒத்துழைப்பிற்குமான சுவிஸ் முகவர் நிலையமானது வெளிவிவகாரக் கூட்டவையின் கீழ் இயங்கும் சர்வதேச ஒத்துழைப்புக்கான சுவிற்சர்லாந்தின் ஒரு முகவர் நிலையமாகும் (FDFA).

அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான இந்த முகவர் நிலையத்தின் மனிதாபிமான உதவிநிகழ்ச்சித் திட்டமானது தேவையை எதிர்நோக்கி நிற்கும் மிகவும் இக்கட்டான சந்தர்ப்பங்களில் ஆணோ பெண்ணோ எவராயினும், எந்த சமயத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும் அரசியல், சமூகப் பின்னணிகளைக் கவனத்தில் கொள்ளாது உதவி வழங்க ஆயத்தமாக உள்ளது. பேரிடர்களும், யுத்தங்களும் நடந்து முடிந்த கால கட்டங்களில் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகள் இடையீடின்றித் தொடர்வதற்கு உதவுவதே அபிவிருத்திக்கும் ஒத்துழைப்பிற்குமான சுவிஸ் முகவர் நிலையத்தின் பிரதான நோக்கமாகும். இவ்வாறாக இந்நிலையம் சுனாமி (ஆழிப்பேரலை) அனர்த்தங்களின் பின்னரும், யுத்தம் முடிவடைந்த பின்னரும் வட மாகாணப் பாடசாலைகளைப் புனர்நிர்மாணம் செய்வதிலும், மறுசீரமைப்புப் பணிகளை முன்னெடுப்பதிலும் பெரும் பங்காற்றியுள்ளது.

பாடசாலைகளின் திருத்தப் பணிகளும், புனர்நிர்மாண வேலைகளும் நடந்து முடிந்த பிறகு அவை சிறப்பாகப் பராமரிக்கப்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வது மிகவும் அவசியமாகும். கற்றல் சாதன-மாகவும், பாடசாலை சொத்துக்களை சரிவரப் பராமரிப்பதன் முக்கியத்துவத்தை பிள்ளைகளுக்கு உணர்த்த உதவும் கருவியாகவும் இந்நூலைப் பயன்படுத்துமாறு ஆசிரியர்களையும் பெற்றோரையும் கேட்டுக் கொள்கிறோம். பிள்ளைகள் தங்களுடைய பாடசாலைக் கட்டிடங்களையும், அங்கு கிடைக்கும் வசதிகளையும் அருமை பெருமையாகப் போற்றி மதிப்பதற்கு இந்நூல் அவர்களுக்கு ஊக்குவிப்பை அளிக்கும். இன்று படிப்பவர்களும், இனிவரும் தலை முறையினரும் தங்கள் பாடசாலை நாட்களை மகிழ்ச்சிகரமானதொரு சூழலில் கழிப்பதற்கும் இது வழிவகுக்கும்.

**பிலிப் பொயிட்லர்**
பிரதேசப் பணிப்பாளர்
இலங்கையின்சுவிஸ் முகவர் நிலைய அலுவலகம்
138 45 கின்ஸி வீதி
கொழும்பு - 8
இலங்கை

# இலங்கை கல்வி அமைச்சின் பணிப்பாளரின் (பாடசாலை பணிகள் பிரிவு) செய்தி

ஒரு பாடசாலையின் பௌதீக வளங்கள் எங்கள் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளில் பெரும் பங்கு வகிக்கின்றன. பாடசாலைக் கட்டிடங்களும், ஏனைய வளங்களும் துரிதமாக அழிவடைந்து வருவதனால் பாடசாலைகளை அடிக்கடி திருத்தவும், புனர்நிர்மாணம் செய்யவும் நேர்கிறது. இதன் பொருட்டு, வருடந்தோறும் பாரிய அளவிலான பணம் செலவாகிறது. சிறிய திருத்த வேலைகளை உரிய வேளையில் செய்யாவிட்டால், அவை காலப்போக்கில் பாரதூரமானவையாக உருவெடுத்துவிடும். பிள்ளைகள் தங்களுடைய பாடசாலைகளைச் சுத்தமாகவும், ஒழுங்காகவும் வைக்கத் தவறும்பட்சத்தில் பாடசாலைக் கட்டிடங்களும், வளவுகளும் கவனிப்பாரற்றுப் போய்விடுவதோடு, பாடசாலைச் சொத்துக்களும் சீரழிந்து பயன்படுத்த முடியாத நிலைமைக்குத் தள்ளப்படலாம். சிறப்பாகப் பேணிப் பாதுகாக்கப்படும் பாடசாலைகளில் படிப்பதென்பது ஓர் இனிய அனுபவமாகும். பாடசாலைக் கட்டிடங்களையும், சொத்துக்களையும், அங்கு கிடைக்கும் வாய்ப்பு வசதிகளையும் ஒழுங்காகப் பேணிப் பாதுகாத்துப் பராமரிப்பது பிள்ளைகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகிய அனைவரதும் முக்கிய கடமையாகும். இந்நூலை வாசிக்கும் ஒவ்வொரு குழந்தையும் தனது பாடசாலையை நேசிக்க ஆரம்பிக்கும். அதேபோல, தாமும், தமக்குப் பின்னால் அங்கே கல்வி பயிலப் போகிறவர்களும் தத்தமது பிள்ளைப் பிராயத்தை இன்பமாகக் கழிக்க உதவும் வகையில் அதை எழில் பொங்கும் ஓர் இனிய இடமாக்க முன்வருவார்கள் என்ற நம்பிக்கையுடன் தான் இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

**திருமதி ஐ.எம்.பெர்ணான்டோ**
பணிப்பாளர் (பாடசாலைப் பணிகள்)
கல்வி அமைச்சு
இசுருபாய
பத்தரமுல்ல
இலங்கை


உலகமே
இன்பமயம் ....
ஆஹா!
இந்தக் காலை
வேளையில்
இவ்வளவு
குதூகலம் ஏன்?
என் அண்ணாவின்
பாடசாலைக்குப்
போயிருந்தேன்.


தங்களுடைய பாடசாலையை
அவர்கள் எவ்வளவு அழகாக
வைத்திருக்கிறார்கள்?
பூ பூத்த மரங்கள்
புதிதாகக் கட்டியது போல
அழகான சுத்தமான
வகுப்பறைகள்.
நீ மயங்கிவிட்டாயா
ராஜு அட பாவமே.


மறு நாள்
ஒரு அருமையான யோசனை சொல்கிறேன் கேட்கிறீர்களா
அது என்ன யோசனை ஸ்ரீ ராம்?
எங்களுக்கும் சொல்.


ராஜூ சொன்னது போல எங்கள் பாடசாலையையும் நல்ல நிலைக்கு கொண்டு வரலாமே.
உண்மைதான் இன்பமான சூழலில் நாமும் நன்றாகப் படிக்கலாம் இல்லையா?


முதலில் குழுக்களாகப் பிரிவோம். பிறகு ஒவ்வொரு குழுவுக்கும் வேலைகளைப் பிரித்து ஒப்படைப்போம்.
என்ன வேலைகள்?
உங்கள் யோசனைகளை சொல்லலாமே.
தோட்டம் பெருக்குவோம்.
மலசலகூடங்களைத் துப்புரவாக வைப்போம்.
வகுப்பறைகளைச் சுத்தமாக்கி ஒழுங்காக்குவோம்.
குப்பை கூளங்களை அகற்றுவோம்.
இந்த வேலைகளைத் தினமும் செய்து வர வேணும்.


எங்கள் பாடசாலை நிலைமை உயரவேணும் சார்! இதுக்கு நாம் ஏதாவது செய்யலாமே. இதைப் பற்றி கலந்து பேசினோம். எல்லாருக்கும் இது பிடித்திருக்கு. நிச்சயம் உதவுவார்கள்.
சந்தோஷம். பாடசாலை அதிபர் என்ற வகையில் உங்கள் யோசனையை வரவேற்கிறேன். வேலையை தொடங்குங்கள் பிள்ளைகளே!
எல்லாத் தெய்வங்களின் ஆசியும் உங்களுக்கு இருக்கிறது. வெற்றி உண்டாகட்டும்.


பாடசாலை விட்ட பிறகே இந்த வேலைகளை செய்யலாம். எல்லோரும் வீட்டுக்குப் போய் பின்னேரம் வாருங்கள்.
ராஹுல் நாம் குழுக்களாகப் பிரிந்து வேலை செய்தால் நல்லது.
சுழற்சி முறையில் வேலை செய்தால் எப்படி?
மெத்தச் சரி. அதே நேரம் யாருக்கும் வேலையில் வெறுப்பு வந்துவிடக்கூடாது.
ஞாயிறு, சமய வகுப்புகள் இருக்கே. அதனாலே அன்றைக்கு வேலையை நிறுத்திவிடுவோம்.
நானும் உதவிக்கு வரலாமா?


இந்த சுழற்சி முறைப்படி தரம் - 13 மாணவர்கள் திங்கள் தோறும் வளவு முழுவதும் கூட்ட வேணும்.
செவ்வாய்க்கிழமைகளில் தரம் - 12 எல்லா வகுப்பறைகளையும் சுத்தமாக்க வேணும்.
சுழற்சி முறைப் பட்டியலின் பிரதி ஒவ்வொரு வகுப்பிலும் தொங்கவிடப்படும். நாம் அதன்படி நடப்போம்.
சரி.
நான் செடிகளுக்கு தண்ணீர் ஊற்றுவேன்.
சுழற்சி முறையில் வேலை செய்தால் எங்கள் பாடசாலை பார்க்க சுத்தமாகவும், அழகாகவும் இருக்கும்.
அது மட்டுமா இது நம் எல்லோருக்கும் நல்ல உடற்பயிற்சியும் தானே.


கூட்டிப் பெருக்க உபகரணங்கள் தேவையே குமார். இது எங்கே கிடைக்கும்.
என்ன வழி என்று சிந்திப்போம். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?
நகரத்து கடைச் சொந்தக்காரரிடம் கேட்போமா?
அருமையான யோசனை. முயற்சி பண்ணலாம்.


வெளியாரிடம் உதவி கேட்க முன் அதிபரின் அனுமதி பெறுவது நல்லது அல்லவா?
சனிக்கிழமையென்றாலும் பாடசாலை சீருடையில் போவது நல்லது. அப்போதான்
நாம் யார் என்று தெரிந்து கொள்வார்கள்.


வணக்கம் மாமா
வணக்கம்
சிங்கம் ஸ்டோர்ஸ்
மாமா எங்களுக்கு உங்கள் உதவி தேவை.
எங்கள் பாடசாலையை அழகாக வைக்க எங்களுக்கு ஆசை. அதுக்கு நிறைய வர்ணப் பூச்சுகளும், உபகரணங்களும் தேவைப்படு கின்றன.
அருமையான யோசனை. பாடசாலை அழகாக இருந்தால் எல்லோருக்கும் பெருமை தானே. பிள்ளைகளே வாருங்கள். தேவையானதைச் சொல்லுங்கள்.
ஆரம்பம் நல்லாயிருக்கு.
நாங்கள் அதிர்ஷ்டசாலிகள்.


சிரி அண்ட் சன்ஸ்
ஆயுபோவன் அங்கிள்!
ஆயுபோவன்! இவ்வளவு விடிய வந்திருக்கிறீர்கள் என்ன விஷயம்?
அங்கிள், எங்களுக்கு உங்கள் உதவி தேவை.
எங்கள் பாடசாலையை அழகான ஓர் இடமாக்க திட்டம் போட்டிருக்கிறேம். அதுக்கு விளக்குமாறு, பூச்சுப் பூசும் தூரிகை, தும்புத்தடிகள், விளக்குமாறுகள், ஏணி, கடப்பாறை, மண்வெட்டிகள், தரை கழுவும் கோல்கள் (மொப்), மலசலகூட அழுக்கு நீக்கிகள் முதலியவை வேணும்.
அபூர்வமான யோசனை. பாடசாலையும் உங்கள் வீடு போலத்தானே. இயலுமான எல்லா உதவியையும் செய்வேன். வாருங்கள் பிள்ளைகள். என்ன வேணுமோ பார்த்து எடுங்கள்.

# பாடசாலை விட்ட பிறகு


ஒரே பின்னேரத்தில் ஒரு பக்கக் களை பிடுங்கிவிட்டோம். நாம் கெட்டிக்காரர்கள்.
தேவையான எல்லாம் கிடைத்தன. நாம் பெரிய அதிஷ்டசாலிகள் இல்லையா?
ஆமாம் நல்லது செய்தால் நல்லது தானே கிடைக்கும்.
ஆமாம் நாம் நல்லவர்கள் நமக்கு எப்பவும் வெற்றிதான்.
சரியாகச் சொன்னாய் தேவி.


சனிக்கிழமை
இந்தப் பிள்ளைகள் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள். அதிபர் என்ற வகையில் நான் கூட பெரிதாக எதுவும் செய்யவில்லை.
பெரிய வகுப்பு மாணவர்களைப் பார்த்து சின்னவர்களும் சேர்ந்து சிரமத்தோடு வேலை செய்கிறார்களே.


நீ சற்று ஓய்வெடு அப்துல்.
வேலியைப் பலமாகக் கட்ட நிறைய கயிறும், தடிகளும் தேவைப்படலாம்.
ஆமாம் அப்போ தான் பூனை, நாய்கள் உள்ளே நுழையாது.
பிறகு பார்க்கலாம்.


பழுதடைந்த மலசலகூடங்களைப் பற்றி அப்பாவுக்குச் சொன்னேன். அவர் அதை இலவசமாகத் திருத்தித் தருகிறாராம்.
திருத்திய பிறகு பிள்ளைகள் அதை சரியாகப் பயன்படுத்துகிறார்களா என்று கவனிக்க வேணும் பிரமிளா!
பெண்கள் மலசலகூடம்
போய்வந்த பிறகு மலசலகூடக் கதவை மூடினாயா சுமி.
மூடிவிட்டேனே.


குப்பை போட தொட்டிகள் வேணும் சார்.
நகர சபையிடம் அதை வாங்கலாம். நான் ஒழுங்கு செய்கிறேன்.
நன்றி சார்!


கொம்போஸ்ட்
கண்ணாடி
பிளாஸ்டிக்
குப்பைகளை அங்குமிங்கும் வீசுகிறவர்களைக் கவனிக்க வேணும்.
வெவ்வேறு குப்பைகளை அதற்குரிய தொட்டிகளில் போட ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ள வேணும்.
வளவில் நான் பொறுக்கிய குப்பைகளை பார்த்தீர்களா?
குப்பைகளைக் கண்ட கண்ட இடங்களில் வீசக்கூடாது.


பழைய பத்திரிகைகளை நகரத்துக் கடைக்கு விற்றுவிடலாம்.
அந்தப் பணத்தைப் பாடசாலைச் செலவுக்காக உண்டியலில் போட்டு வைக்கலாம்.
இதனால் நன்கொடைக்காக எவரிடமும் கையேந்தத் தேவையில்லை.


ஆறு நாள் பின்னேரங்களில் வகுப்பறைகளுக்குப் பூச்சுப் பூசிவிட்டோம். மசூக் தான் வெளிச்சுவர்களுக்கு பூசினான்.
எல்லோரும் கேளுங்கள். சுவர்களுக்கு பூச்சுப் பூசியாச்சு. இதை நன்றாகப் பராமரிப்பது தான் அடுத்த வேலை.
நாங்கள் மலசலகூடங்களுக்குப் பூச்சுப் பூசினோம்.
சுவர்களில் ஆணி அறையக் கூடாது. தாள்களை சுவரில் ஒட்டவும் வேண்டாம்.
புஷ்பம் அக்கா, பாடசாலை விட்டு வீட்டுக்குப் போக முன் ஒவ்வொருவரும் வகுப்பறைகளை ஒழுங்குபடுத்தினால் நல்லது.
ஆமாம் நல்ல யோசனை
அதற்கு முழுப்புள்ளிகள் கொடுக்கலாம் சந்து.


பிள்ளைகளே நீர் குழாய் ஒழுக்கு, வடிகால் அடைப்பு, உடைந்த ஜன்னல்கள், மலசலகூட அடைப்பு, முக்கியமாக பாதுகாப்பில்லாத மின்சாரக் கம்பிகள் என்பவற்றைக் கண்டால் எனக்குச் சொல்லி விட வேணும்.
சரி டீச்சர் கட்டாயம் சொல்லுவோம்.


டீச்சர், எங்கள் ஊஞ்சல் உடைந்திருக்கு.
நேற்று நான் கூட அதிலிருந்து விழுந்துவிட்டேன்.
எங்கள் அப்பா அதை திருத்தி தருகிறாராம்.


எங்கள் பாடசாலையை அழகாக வைக்க சில விதிகளைத் தயாரித்திருக்கிறேன். எல்லோரும் அதைக் கவனமாக வாசித்து அதன்படி நடக்க வேணும் சரிதானே.
சரி கோகுல் அண்ணா. அதில் உள்ளது போல செய்வோம்.
ரொம்ப நல்லது.


அறிவிப்பு பலகை எங்களுக்கு எட்டாது. நீங்கள் தான் அதில் உள்ளதை சொல்ல வேணும்.
நிச்சயமாக அதைப் பற்றி நானே சொல்வேன்.
அந்த விதிகள் என்ன? தெரிந்து கொள்ள ஆசையாயிருக்கு.
இவற்றைக் கற்பது கஷ்டமில்லை.


அறிவிப்புப் பலகை
பாடசாலையை அழகாகவும் சுத்தமாகவும் வைத்திருக்க நாம் செய்ய வேண்டியவையும் தவிர்க்க வேண்டியவையும்
உங்கள் வகுப்பறையை ஒழுங்காகவும், சுத்தமாகவும் வையுங்கள்.
சுவரில் எதையும் ஒட்டாதீர்கள்.
பூச்சு கழன்றுவிடும் இயலுமான வரை அறிவிப்புப் பலகைகளை பயன்படுத்துங்கள்.
பாடசாலை மைதானத்தைச் சுத்தமாக வையுங்கள். கழிவுகளை நிலத்தில் வீசாதீர்கள். பாடசாலைக் குப்பைத் தொட்டிகளில் போடுங்கள்.
பிளாஸ்டிக் ஷொப்பிங் பைகளைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். முடிந்தவரை பைகளையும், போத்தல்களையும் மீளப்பயன்படுத்துங்கள்.
பிளாஸ்டிக் அல்லது பொலிதீனை கொம்போஸ்ட் தொட்டிகளில் போட வேண்டாம். இவற்றுக்கு வேறு தொட்டிகள் உண்டு.
எங்களுக்கும் கொஞ்சம் சொல்லுங்கள்.
அதை உரக்க வாசியுங்கள்.
என்னைத் தூக்கிக் காட்டுங்கள்.

## அறிவிப்புப் பலகை

பயன்படுத்தாத போது மின்சார காற்றாடிகளையும், மின்குமிழ்களையும் அணையுங்கள்.

பாடசாலை சுவர்களிலோ, தளபாடங்களிலோ எழுத வேண்டாம்.

மலசலகூடத்துக்குப் போன பிறகு நீர் விட்டு அலசி சுத்தமாக்குங்கள்.

பிளாஸ்டிக் கலன்களில், வெற்று டயர்களில் நீர் சேர விட வேண்டாம். நுளம்புகள் இதில் பெருகலாம்.

பாடசாலை அழகாகக் காட்சியளிக்கவேண்டுமானால் அதைச் சூழ மரக்கறிச் செடிகள், பழமரங்கள், பூச்செடிகள் என்பவற்றை வளர்க்கலாம்.

**நீங்கள் எதிர்பார்க்கும் மாற்றம் நிகழ .... இன்றே தொடங்குங்கள். மற்றவர்களும் உங்களை விரைவில் பின்பற்றுவார்கள்.**




இப்போ மரக்கறி தோட்டத்தில் தொடங்குவோம். இது ரொம்ப முக்கியம்.
எனக்கும் மரக்கறிச் செடி நட விருப்பம்.
நாளை பாடசாலை விட்டதும் தொடங்கலாமே.


மறு நாள் பாடசாலை விட்டதும்
முதலில் எல்லா புல்பூண்டுகளையும் பிடுங்கி இடத்தை துப்புரவாக்குவோம்.
மரக்கறி விதைகளை நாற்றுமேடைகளில் விதைத்து வளரவிடுவோம்.
செடிகளை நட முன்
இதற்கிடையில் மண்ணை பண்படுத்திவிடலாம்.


இரண்டு வாரங்களின் பின்
கன்றுகளை நடும் போது ஒன்றுக்கொன்று இடைவெளி இருக்க வேணும்.
வெண்டிப் பாத்தி எங்களுடையது. அது வேகமாய் வளரும்.
நிச்சயமாக தருவேன் தங்கச்சி. நீயும் நடலாம்.
எனக்கும் நட ஏதாவது கொடுங்களேன் அக்கா.
இதோ எங்கள் குப்பை தொட்டியில் கிடைத்த கொம்போஸ்ட் உரம்.
செடிகளுக்குப் போடலாம்.


இரண்டு மாதங்களின் பின்
இந்தச் செடிகள் நன்றாக வளர்ந்திருக்கே.
இது நான் செய்த வெருளி பொம்மை. எப்படி இருக்கு?
ஆஹா! உன் தம்பி அக்பர் போலவே இருக்கு.
மீனா அவனை கேலி பண்ணாதே. அருமையான காரியம் செய்திருக்கிறான்.
பாராட்டுக்கள் அண்ணா. நீங்கள் கெட்டிக்காரர்.


அடுத்த மழை காலத்துக்கு முன் நீர்ப்பாசன தொட்டியை நன்றாகக் கழுவிவிட வேணும்.
நல்ல யோசனை
ஆமாம் அமீனா கட்டாயம்.
போன வருஷம் நாங்கள் அதை சரியாக சுத்தப்படுத்தவில்லை.
அதனால் தான் தண்ணீர் தேங்கியது இல்லையா?
நாளை சனிக்கிழமை தானே தொட்டியை சுத்தமாக்குவோமா.
நனைந்து சேறாகி விடலாம். அதனால் பழைய உடுப்புகளை. அணிந்து வாருங்கள்


பாடசாலையை சிறப்பாக்குவதும் உங்கள் பெற்றோரை நன்றாகக் கவனிப்பது போலத்தான். பாடசாலையே எழுத்தறிவித்த உங்கள் அன்னை
நீங்கள் பாடசாலையைச் சுத்தமாகவும், அழகாகவும் வைத்திருப்பதைக் காண ஆனந்தமாக இருக்கிறது. உங்கள் படிப்பிலும் நிறைய முன்னேற்றம் தெரிகிறது.
இந்த வேலைகளைத் தொடருங்கள் பிள்ளைகளே!


ரமேஷ் கொஞ்சமாக வெட்டு. காய்ந்த கொப்புகளை மட்டும் வெட்டு.
பெரிய கத்திரிக்கோலால் வெட்ட எனக்கும் ஆசை.
ஒட்டுப் புல்லை தினமும் பிடுங்கிவிட வேணும். அவை எங்கள் மேல் ஒட்டிக் கொள்ளும்.
ஸ்ரீனா தள்ளிப் போ. நனைந்துவிடுவாய்.
எனக்கும் தா அப்துல். நானும் செடிக்கு பிடிக்கிறேன்.


எங்களுக்கு ஒரு கன்டீன் அவசியம்.
இதை நடத்துவாரா என்று மேட்டுத் தெரு ரஹீம் மாமாவைக் கேட்கலாம்.
முதலில் அதிபரின் அனுமதியை பெறுங்கள்.
நான் போய் அனுமதி கேட்கவா?
சரி! சரி சீக்கிரம் போ.


ரஹீம் தேநீர் கடை.
ரஹீம் மாமா! எங்கள் பாடசாலையில் ஒரு கன்டீன் நடத்துவீர்களா?
மகன் நான் கடையை பாக்க வேணும். என் தம்பி செய்வார்.
அதிபரின் அனுமதியோடு தான் வந்திருக்கிறோம்.
அவரிடம் கேட்டு சொல்கிறேன். சரியா?


அம்மணி! பிள்ளைகள் பாடசாலையை அழகாக வைக்க ஆர்வமாக வேலை செய்கிறார்கள்.
ஆமாம். இது அதிபருக்கும், ஆசிரியர்களுக்கும் பெருமையாய் இருக்கிறது.
அது மட்டுமா அவர்களின் படிப்பிலும் முன்னேற்றம் தெரிகிறது.
என் சின்ன மகளுக்கு எப்பவும் மரக்கறித் தோட்டம் பற்றித்தான் கதை.
நில்லு! நில்லு! வேகமாய் ஓடாதே.
டீச்சர் மாமி..... டீச்சர் மாமி.



சிவம் உங்கள் பாடசாலை இப்போ ரொம்ப அழகாக இருக்கிறதே.
பிள்ளைகளும் ஒழுங்காக இருக்கிறார்கள். பாடசாலையின் இந்த முன்னேற்றம் அயலவர்களான எங்களுக்கு மகிழ்ச்சியை தருகிறது.
பிள்ளைகளே எந்த உதவி வேணுமானாலும் கேளுங்கள்.
உங்கள் அன்புக்கு நன்றி மாமா.


மூன்று மாதங்களின் பின்
நல்ல செய்தி முத்தலிப்!
சார்! மரக்கறி, பழங்களை பறிக்க காலம் வந்தாச்சு. வார இறுதியில் பாடசாலையில் ஒரு சந்தை கூட்டலாமா?
உதவியவருக்கு நன்றிக்கடன் செலுத்தும் நல்ல குணத்தை பாராட்டுகிறேன். பிள்ளைகள் எனக்கு பெருமையாயிருக்கு. கட்டாயம் அவர்களை அழையுங்கள்.
சிங்கம் மாமாவையும், சிரி மாமாவையும் அழைப்போம். அவர்கள் முதலில் பொருள்களை வாங்கட்டும். அவர்கள் தான் எங்களுக்கு தேவையானதெல்லாம் கொடுத்துதவினார்கள்.



வணக்கம்
மகளே.
வணக்கம் சிங்கம்
மாமா. வாருங்கள்.
எங்கள் சந்தையை
பாருங்கள்.




ஆயுபோவன்
மகள்.
ஆயுபோவன்!
சிரி மாமா.
வாங்கோ.
எங்கள் சந்தை
எப்படி?
இந்த பத்திரிகைக் கட்டை
அப்படியே நான்
வாங்கிறேன்.
சரி.
எனக்கும்
ஆயுபோவன்
சொல்லலாமே.


கொம்போஸ்ட்
இந்த வெண்டைக்காய்கள் புதிசாக இருக்கே! இரண்டு கிலோ தாருங்கள்.
இந்த மரக்கறிகள் இயற்கை பசளையில் வளர்ந்தவை. எமக்கு நல்லது.
எத்தனை பப்பாசிப்பழம் வேணும் மாமி?
இந்த சந்தையை அடிக்கடி கூட்ட வேணும் மகன்.
பிள்ளைகள் மகா கெட்டிக்காரர்.
இரண்டு பழங்கள் போதும்.
இரண்டு பிடி வல்லாரை.
நல்ல மாதிரி.
ஆமாம்.
மாமி கொய்யாப்பழம். வேண்டாமா


எங்கள் விற்பனையால் கணிசமான தொகை கிடைத்திருக்கு சார்.
ஆமாம். மௌஜூட் இது உங்கள் முதல் முயற்சி. எனக்கு சந்தோஷம் பிள்ளைகளே.
நீங்கள் அருமையாக செய்தீர்கள்.
மீண்டும் நடத்தும்படி பெற்றோர் சொல்கிறார்கள் சார்.


பாடசாலை பராமரிப்புக்காக பணத்தை சேமிப்புக் கணக்கில் போடுவோம்.
அது தான் சரி.
இது தொடரும் சார். நாம் கடுமையாக உழைப்போம்.



அன்பான பிள்ளைகளே பாடசாலையை தரம் உயர்த்த எவ்வளவோ பாடுபட்டீர்கள்.
எல்லாரும் கடுமையாக உழைத்தீர்கள்
ஆசிரியர் குழுவே உங்களை எண்ணி பெருமைப்படுகிறது.
இதைத் தொடர்வீர்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.


அரவிந்த வித்தியாலயம்
ஆஹா பாடசாலை இப்போ எவ்வளவு அழகாகவும், சுத்தமாகவும் இருக்கிறது.
இங்கே வருவதே ஆனந்தம்.
பிள்ளைகள் சந்தோஷ மாயிருந்தால் நல்லதையே செய்வார்கள்.

# பாடசாலை கீதம்



பாடசாலையே எமதில்லம்
நாம் வாழும் மறு இல்லம்
ஒற்றுமையாய் நாம் எல்லோரும்
கூடிக்குலாவி மகிழும் இடம்





கல்வியில் சிறந்த ஆண்களாய்
அறிவில் முதிர்ந்த பெண்களாய்
வாழ்வில் உயர்ந்திடப் பாடங்கள்
இங்கே கற்றுத் தேர்ந்திடுவோம்





பள்ளிக்கூடமே எமதினிய
கல்வித் தாய் எனப் போற்றிடுவோம்
வாழ்வில் அவளை எந்நாளும்
மறவோம் மறவோம் மறவோமே



எழுத்தறிவித்த அன்னையின் மகிமை ஒளிவீச
மனங்கனிந்தெங்கள் அன்பினை நாம்
பணிவுடன் அவள் தன் பாதங்களில்
வைத்து வணங்கிப் போற்றிடுவோம்.